# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

2026 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 09 ஆந் திகதிய
பகுதி II இற்குக் குறைநிரப்பி

(2026.10.14 ஆந் திகதியன்று வெளியிடப்பட்டது)

## நம்பிக்கைப் பொறுப்புக்கள் (திருத்தம்)

(87 ஆம் அத்தியாயமான) நம்பிக்கைப்பொறுப்புக்கள் கட்டளைச்சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் அவர்களால்
பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 116.00 தபாற் செலவு : ரூபா 150.00

இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்

## சட்டப்பயன் பற்றிய கூற்று

***வாசகம் 2 :*** இவ்வாசகம், (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) (87 ஆம் அத்தியாயமான) நம்பிக்கைப்பொறுப்பு கட்டளைச்சட்டத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயன், நீதிவான் நீதிமன்றத்துக்கு நியாயாதிக்கம் வழங்கப்பட்டுள்ளதால் "நீதிமன்றத்துக்கான" சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை நீக்குவதுமாகும்.

***வாசகம் 3 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தில் 5அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துகின்றது என்பதுடன் புதிய பிரிவின் சட்டப்பயனானது பின்வருவனவாகும் –

(அ) முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் மற்றும் (2) ஆம் உட்பிரிவுகளின்கீழ் உருவாக்கப்பட்ட நம்பிக்கைப்பொறுப்பு சாதனங்களின் பதிவுக்காக நடவடிக்கை முறையொன்றை ஏற்பாடுசெய்தல்;

(ஆ) வெளிநாடொன்றின் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட நம்பிக்கைப் பொறுப்புக்களை பதிவுசெய்வதற்காக ஏற்பாடுசெய்தல்;

(இ) வெவ்வேறு சூழ்நிலைகளின்கீழான நம்பிக்கைப்பொறுப்பொன்று நடைமுறைக்குவரும் தேதியை பொருள்கோடல் செய்தல்; அத்துடன்

(ஈ) உளதாயுள்ள நம்பிக்கைப்பொறுப்புக்களுக்கு பதிவுசெய்யப்படவேண்டிய காலப்பகுதியொன்றை ஏற்பாடுசெய்தல்.

***வாசகம் 4 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 6அ என்னும் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயன், நம்பிக்கைப்பொறுப்பொன்று தொடர்பிலான தகவல் தொடர்பாக உளதாயுள்ள ஏற்பாடுகளை அதிகரிப்பதுமாகும்.

***வாசகம் 5 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 6ஆ என்னும் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயன், பதிவாளர் தலைமையதிபதி மூலமான நம்பிக்கைப்பொறுப்பு தொடர்பில் தகவலை பகிர்தல் தொடர்பாக உளதாயுள்ள ஏற்பாடுகளை அதிகரிப்பதுமாகும்.

***வாசகம் 6 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 19அ என்னும் பிரிவை மாற்றீடுசெய்கின்றது என்பதுடன் புதிய பிரிவின் சட்டப்பயன், வெளிப்படை நம்பிக்கைப்பொறுப்பின் பயனுகரிகளின் தகவல் உள்ளடங்கலாக, நம்பிக்கைப்பொறுப்பின் பதிவேடுகளை வைத்திருப்பதற்கு நம்பிக்கைப்பொறுப்பாளர் மீதான கடமையொன்றை விதிப்பதுமாகும்.

***வாசகம் 7 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 19ஆ என்னும் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயன், இயைபான அதிகாரசபையொன்றுக்கு நம்பிக்கைப்பொறுப்பு தொடர்பிலான தகவலை வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரை இயலுமாக்குவதுமாகும்.

***வாசகம் 8 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 19இ என்னும் பிரிவை மாற்றீடுசெய்கின்றது என்பதுடன் புதிய பிரிவின் சட்டப்பயன், 5அ, 6அ, 19, 19அ மற்றும் 19ஆ என்னும் பிரிவுகளின் ஏற்பாடுகளை மீறுவதற்கான தண்டங்களை விதிப்பதுமாகும்.

***வாசகம் 9 :*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தில் 19ஈ, 19உ மற்றும் 19ஊ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துகின்றது என்பதுடன் புதிய பிரிவுகளின் சட்டப்பயன் பின்வருவனவாகும் –

(அ) பதிவாளர் தலைமையதிபதியினால் நிருவாக தண்டங்களை விதிப்பதற்கு ஏற்பாடு செய்தல்; அத்துடன்

(ஆ) அத்தகைய தண்டங்களை அறவிடுவதற்கான நடவடிக்கைமுறையொன்றை ஏற்பாடு செய்தல்.

ச.வ-ஓ. 1/2025

## (87 ஆம் அத்தியாயமான) நம்பிக்கைப்பொறுப்புக்கள் கட்டளைச்சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப்பெயர்

**1.** இச்சட்டம், 2026 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, நம்பிக்கைப் பொறுப்புக்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

87 ஆம் அத்தியாயத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்

**2.** (இச்சட்டத்தில் “முதன்மைச்சட்டவாக்கம்” எனக் குறிப்பீடு செய்யப்படுவதும்) 2018 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறானதுமான (87 ஆம் அத்தியாயமான) நம்பிக்கைப்பொறுப்புக்கள் கட்டளைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவு பின்வருமாறு மேலும் இத்தால் திருத்தப்படுகின்றது: -

(1) அப்பிரிவின் (ங) என்னும் பந்தியை நீக்கி விடுவதன்மூலமும்; அத்துடன்

(2) அதன் (ஞ) என்னும் பந்தியில், “வெளிப்படையான நம்பிக்கைப்பொறுப்பு” என்பதன் வரை விலக்கணத்தில் “எழுத்தில் பொதுவாக ஒரு சாசனம்” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “எழுத்தில் ஒரு சாதனம்” என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக் கத்தின் 5 அ ஆம் பிரிவை உட்புகுத்துதல்.

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 5ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், இது அச்சட்டவாக்கத்தின் 5அ என்னும் பிரிவாகப் பயனுடைய தாதலும் வேண்டும்: -

“நம்பிக்கைப் பொறுப்புச் சாதனத்தைப் பதிவுசெய்தல்

5 அ. (1) ஐந்தாம் பிரிவின் (1) ஆம் அல்லது (2) ஆம் உட்பிரிவின்கீழ் உருவாக்கப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பொன்றின் நம்பிக்கைப் பொறுப்பாளரொருவர், அத்தகைய நம்பிக்கைப் பொறுப்பை உருவாக்குகின்ற சாதனத்தின் நிறைவேற்றல் தேதியிலிருந்து ஒருமாதத்தினுள் அத்தகைய நம்பிக்கைப்

PL15966 - 470 (2026/10)

பொறுப்புச் சாதனத்தைப் பதிவாளர் தலைமை யதிபதியிடம் பதிவுசெய்வித்தல் வேண்டும்.

(2) (அ) அசையா ஆதனம் தொடர்பிலான நம்பிக்கைப் பொறுப்பொன்று இறுதிவிருப் பாவணம்மூலம்பிரகடனம்செய்யப்படுமிடத்து, அத்தகைய இறுதிவிருப்பாவணத்தைப் பின்பற்றி நிறைவேற்றப்பட்ட எந்த ஏதேனும் அடுத்துப்பின்னரான சாதனம் மூலம் அசையா ஆதனம் கைமாற்றப்படுகின்றதோ அல்லது உரித்தாக்கப்படுகின்றதோ அந்த அடுத்துப்பின்னரான சாதனம் அத்தகைய கைமாற்றம் அல்லது உரித்தாக்கல் தேதியி லிருந்து ஒரு மாதத்தினுள் பதிவாளர் தலைமை யதிபதியிடம் பதிவுசெய்யப்படுதல் வேண்டும்.

(ஆ) அசையும் ஆதனம் தொடர்பிலான நம்பிக்கைப்பொறுப்பொன்று இறுதி விருப்பாவணம் மூலம் பிரகடனம் செய்யப் படுமிடத்து, இறுதிவிருப்பாவணத்துடன் சேர்த்து மரணசாதன அதிகாரப்பத்திரம், அத்தகைய மரணசாதன அதிகாரப்பத்திர அளிப்புத் தேதியிலிருந்து ஒரு மாதத்தினுள் பதிவாளர் தலைமையதிபதியிடம் பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

(3) (அ) ஒரு வெளிநாட்டுச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டு அதனால் ஆளப்படுகின்ற நம்பிக்கைப்பொறுப்பொன்றின் ஒரு நம்பிக்கைப்பொறுப்பாளர் அல்லது (இக் கட்டளைச்சட்டத்தில் "அதிகாரமளிக்கப் பட்ட ஆள்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) நம்பிக்கைப்பொறுப்பொன்றின் நம்பிக்கைப் பொறுப்பாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர், அந்நம்பிக்கைப்பொறுப்பு இலங்கையில் நடைமுறைக்குவருகின்ற தேதியிலிருந்து மூன்று மாதங்களினுள் அத்தகைய நம்பிக்கைப்பொறுப்புச் சாதனத்தைப் பதிவாளர் தலைமையதிபதியிடம் பதிவுசெய்தல் வேண்டும்.

(ஆ) இவ்வுட்பிரிவின் நோக்கத் துக்காக, நம்பிக்கைப்பொறுப்பானது இலங்கையில் நடைமுறைக்குவரும் தேதி என்பது, பின்வரும் நாளை உள்ளடக்கு கின்றது -

(i) இலங்கையிலுள்ள ஏதேனும் நிதிநிறுவனத்தில் கணக்கொன்று திறக்கப்படுகின்ற நாள்;

(ii) இலங்கையில் முதலீடொன்று செய்யப்படுகின்ற நாள்;

(iii) பயனுறு அக்கறையின் கொடுப்பனவொன்று இலங்கை யில் செய்யப்படுகின்ற நாள்;

(iv) அத்தகைய நம்பிக்கைப்பொறுப்பு தொடர்பான ஏதேனும் தொழில் அல்லது செயற்பாடு இலங்கையில் தொடங்கப்படுகின்ற நாள்;

(v) அத்தகைய நம்பிக்கைப் பொறுப்பின் நம்பிக்கைப் பொறுப்புச் சேவைகளை வழங்குகின்ற நம்பிக்கைப் பொறுப்பாளரொருவர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆள், அத்தகைய ஆள் வெளி நாட்டவரொருவராக இருப்பின், இலங்கையில் வதிவாளராக வாழிடம் கொண்டவராக வருகின்ற நாள்; அல்லது

(vi) அத்தகைய நம்பிக்கைப் பொறுப்பின் நம்பிக்கைப் பொறுப்புச் சேவைகளை வழங்கு தலை இலங்கையில் தாபிக்கப் படுகின்ற நாள்.

(4) இப்பிரிவு தொடங்கும் தேதிக்குமுன்னர் 5 ஆம் பிரிவின் (1) ஆம் அல்லது (2) ஆம் உட்பிரிவின்கீழ் உருவாக்கப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பொன்றின் நம்பிக்கைப் பொறுப்பாளர் ஒருவர், இப்பிரிவு தொடங்கும் தேதியிலிருந்து ஆறுமாதங்களினுள் அத்தகைய நம்பிக்கைப்பொறுப்புச் சாதனத்தைப் பதிவாளர் தலைமை யதிபதியிடம் பதிவுசெய்தல் வேண்டும்.

(5) நம்பிக்கைப் பொறுப்புச் சாதனமொன்றைப் பதிவுசெய்வதற்கான ஒவ்வொரு விண்ணப்பமும் விதித்துரைக்கப் படக்கூடியவாறானவொரு படிவத்தில் நம்பிக்கைப்பொறுப்பு சாதனத்தின் அல்லது விடயத்துக்கேற்ப (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்படும் ஆவணங்களின் பிரதியொன்றுடன் சேர்த்து பதிவாளர் தலைமையதிபதிக்குச் செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், விதித்துரைக்கப்படக்கூடியவாறான ஒரு கட்டணத்துடன் சேர்த்தனுப்பப்படுதலும் வேண்டும். பதிவாளர் தலைமையதிபதி, அவசியமானவிடத்து, தேவைப்படுத்தக் கூடியவாறான அத்தகைய மேலதிகத் தகவல்களைக் கொடுத்துதவும்படி விண்ணப்ப காரரைத் தேவைப்படுத்தலாம்.

(6) நம்பிக்கைப் பொறுப்புச் சாதனம் பதிவு செய்யப்பட்டதன்மேல், பதிவாளர் தலைமையதிபதியானவர் பதிவுச் சான்றிதழொன்றை விண்ணப்பகாரருக்கு வழங்குதல் வேண்டும். ஒவ்வொரு பதிவுச் சான்றிதழும் வழங்குகைத் தேதியிலிருந்து ஐந்தாண்டுகளுக்குச் செல்லுபடியாதல் வேண்டும்.

(7) பதிவுச்சான்றிதழொன்று முடிவுறு முன்னர் மூன்று மாதங்களுக்குப் பிந்தாமல் விதித்துரைக்கப்படக்கூடியவாறான ஒரு படிவத்தில் பதிவாளர் தலைமையதிபதிக்கு அதுசார்பில் செய்யப்படுகின்ற விண்ணப் பத்தின் மேல் பதிவுச் சான்றிதழ் புதுப்பிக்கப் படற்பாலதாதல் வேண்டுமென்பதுடன், விதித்துரைக்கப்படக்கூடியவாறான ஒரு கட்டணத்துடன் சேர்த்தனுப்பப்படுதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 6அ என்னும் பிரிவைத் திருத்துதல்

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 6அ என்னும் பிரிவானது, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(2) வெளிப்படையான நம்பிக்கைப்பொறுப்புத் தொடர்பில் ஏதேனும் அசையா ஆதனத்தின் அல்லது அசையும் ஆதனத்தின் நம்பிக்கைப்பொறுப் பாளரொருவர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆள் விடயத்துக்கேற்ப, 5அ என்னும் பிரிவின் (1), (2), (3) மற்றும் (4) ஆம் உட்பிரிவுகளில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் (1) ஆம் உட்பிரிவின்கீழ் இடாப் பொன்றை தயாரித்துப் பேணுகின்ற நோக்கத்துக்கென பதிவாளர் தலைமையதிபதிக்கு எல்லா அத்தகைய தகவலையும் அனுப்பிவைத்தல் வேண்டும்.

(3) நம்பிக்கைப்பொறுப்பாளரொருவர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆள், 5அ என்னும் பிரிவின் (4) ஆம் மற்றும் (5) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடு களின்கீழ் நம்பிக்கைப்பொறுப்பு சாதனத்தை பதிவுசெய்யும் நேரத்தில் கொடுத்துதவப்பட்ட அல்லது தேவைப்படுத்தப்பட்ட தகவலுக்கு மேலதிகமாக விதித்துரைக்கப்படக்கூடியவாறாக நம்பிக்கைப் பொறுப்புத் தொடர்பிலான அத்தகைய வேறு தகவலை கொடுத்தல் வேண்டும்.

(4) நம்பிக்கைப்பொறுப்பாளர் அல்லது அதிகார மளிக்கப்பட்ட ஆள், தகவல்களின் அத்தகைய அடுத்துப் பின்னரான மாற்றம் எத்தேதியன்று பதியப்பட்டுள்ளதோ அத்தேதியிலிருந்து பதினான்கு வேலைநாட்களினுள், (2) ஆம் உட்பிரிவின்கீழ் கொடுக்கப்பட்ட தகவல்களின் அத்தகைய அடுத்துப்பின்னரான மாற்றத்தைப் பதிவாளர் தலைமையதிபதிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 6ஆ என்னும் பிரிவைத் திருத்துதல்

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 6ஆ என்னும் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது: -

"(1) பதிவாளர் தலைமையதிபதியானவர்,-

(அ) சட்டத்துறைத் தலைமையதிபதியினால்;

(ஆ) 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட நிதிசார் உளவறிதற் கூறினால்;

(இ) கணக்காய்வாளர் தலைமையதிபதித் திணைக்களத்தினால்;

(ஈ) சுங்கப் பணிப்பாளர் தலைமையதி பதியினால்;

(உ) உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதியினால்;

(ஊ) பணம் தூய்தாக்கல், பயங்கரவாதி நிதியளிப்பு அல்லது வேறேதேனும் குற்றவியல்தவறு என்பவற்றைப்புலனாய்வு செய்கின்ற அல்லது அவற்றுக்கெதிராகக் குற்றவழக்குத்தொடுக்கின்ற பொறுப்புடைமையைக் கொண்டுள்ள ஏதேனும் பகிரங்க அதிகாரியினால்;

(எ) ஏதேனும் பகிரங்கப் பெறுகை அதிகாரியினால்; அல்லது

(ஏ) ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் பணம் தூய்தாக்கலை எதிர்ப்பதனை அல்லது பயங்கரவாதத்துக்கு நிதியளித்தலை முறியடிப்பதனை மேற்பார்வை செய்வதற்கு அல்லது கண்காணிப்பதற்கு தேவைப்படுத்தப்படுகின்ற ஏதேனும் ஒழுங்குபடுத்தும் அதிகாரியினால்,

கோரிக்கையொன்று செய்யப்படுவதன் மேல் 6அ என்னும் பிரிவின்கீழ் பேணப்பட்ட இடாப்பில் வைத்திருக்கப்படும் ஏதேனும் வெளிப்படையான நம்பிக்கைப்பொறுப்பு தொடர்பான தகவல்களைக் கிடைக்கக்கூடியனவாக்குதல் வேண்டும்.

(1அ) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்கென, கிடைக்கக் கூடியனவாகச் செய்யப்பட்ட தகவல் அத்தகைய தகவல் பதிவாளர் தலைமையதிபதியினால் வைத்திருக்கப்படும் அளவிற்கு பின்வருவனவற்றை உள்ளடக்குதல் வேண்டும்:-

(அ) நம்பிக்கைப் பொறுப்பின் உருவாக்கல் தேதி, நம்பிக்கைப் பொறுப்பை ஆளுகின்ற சட்டம், மற்றும் நம்பிக்கைப் பொறுப்பாளரின் வதிவிடம் உள்ளடங்கலாக வெளிப்படையான நம்பிக்கைப்பொறுப்பு தொடர்பிலான அடிப்படையான தகவல்;

(ஆ) பயனுகரிகள் அல்லது பயனுகரிகளின் வகுப்புகள் தொடர்பிலான தகவல் உட்பட 19அ என்னும் பிரிவில் குறிப்பீடுசெய்யப்படும் தகவல்; அத்துடன்

(இ) ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் அறிக்கையிடப்பட்ட ஏதேனும் கணக்கு, முதலீடு அல்லது வேறு சொத்துகளின் விபரங்கள்.

(1ஆ) பிரிவு 6அ என்பதன் (1) உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட தகவல்கள், பொது மக்களின் உறுப்பினராகவுள்ள ஒருவரினால் பார்வைக்கானவொரு கோரிக்கை செய்யப் படுவதன்மேல், இலத்திரனியல் ரீதி யிலாயினுஞ்சரி அல்லது நேரடியாக வாயினுஞ்சரி பதிவாளர் தலைமையதிபதியினால் கிடைக்கக் கூடியனவாக்கப்படுதல் வேண்டும், ஆனால் தகவல்களானவை, நம்பிக்கைப்பொறுப்பு ஆக்குநரின், நம்பிக்கைப்பொறுப்பாளரின் மற்றும் பயனுகரியின் முழுப்பெயர்களுக்கும், அத்தகைய பயனுகரியின் பயனுறு அக்கறையின் தன்மைக்கும் அளவுக்கும் வரையறுக்கப்படுதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், எவையேனும் மேலதிகத் தகவல்களை நாடுகின்ற பொது மக்களின் எவரேனும் உறுப்பினர், 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் ஏற்பாடுகளினது நியதிகளின்படி தகவல்களுக்கான விண்ணப்பமொன்றைச் செய்யலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 19அ என்னும் பிரிவை மாற்றீடுசெய்தல்

**6.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 19அ என்னும் பிரிவை இத்தாற் நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவு இடப்படுகின்றது: -

"பதிவேட்டில் அடையாளம் பற்றிய நாளது வரையாக் கப்பட்ட தகவல்களை நம்பிக்கைப் பொறுப்பாளர் வைத்திருத்தல்.

**19அ.** (1) நம்பிக்கைப்பொறுப்பாளர் ஒருவர், 6 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 5 ஆம் பிரிவின் (1) ஆம் அல்லது (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் வெளிப்படையான நம்பிக்கைப்பொறுப்பு உருவாக்கப்படும் நேரத்தில் பின்வரும் ஆட்களின் அடையாளம்

பற்றி, விதித்துரைக்கப்படக்கூடியவாறான, அத்தகைய எல்லாத் தகவல்களினதும் பதிவேடுகளை வைத்திருத்தல் வேண்டும்: -

(அ) நம்பிக்கைப் பொறுப்பாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆள்;

(ஆ) கூட்டு நம்பிக்கைப்பொறுப்பாளர் எவரேனுமிருப்பின்;

(இ) நம்பிக்கைப்பொறுப்பு ஆக்குநர்;

(ஈ) நம்பிக்கைப் பொறுப்பின் பயனுகரி அல்லது, பயனுகரிகள் வரையறுத்துக் கூறப்பட்ட அல்லது திட்ட வட்டமாக ஆய்ந்தறியக் கூடிய ஆட்களின் வகுப்பை அமைத்துருவாக்குகின்றவிடத்து, நியாயமாக ஆய்ந்தறியக்கூடிய அளவுக்கு அத்தகைய பயனுகரி ஒவ்வொருவரும், அல்லது தனியாளை அடையாளம் காண்பது நியாயமாக செயன் முறைக்குகந்ததற்றதாகவிருக் கின்றவிடத்து, அவ்வகுப்பினுள் பயனுகரிகளை அடையாளம் காண்பதற்கு, நியாயமாக செயன்முறைக்குகந்த அளவுக்கு போதுமான தகவலுடன் சேர்த்து வகுப்பின் வரையறுத்துக் கூறப்பட்ட குணவியல்புகள் உள்ளடங்கலாக, அதன் தெளிவானதொரு விவரணம்;

(உ) ஒரு பாதுகாவலர் அல்லது வேறு மூன்றாந்திறத்தவருட்பட ஆனால் அவருக்கு வரையறுக்கப் படாமல், நம்பிக்கைப் பொறுப்பின்மீது அல்லது நம்பிக்கைப் பொறுப்பாதனத்தினது கையுதிர்ப்பின்மீது பயனுள்ள

கட்டுப்பாட்டைப் பிரயோகிக்கக் கூடிய வேறெவரேனும் இயற்கை ஆள்; அத்துடன்

(ஊ) ஒரு முகவர், ஒரு சட்டப் பிரதிநிதி, ஒரு முகாமையாளர், ஒரு முதலீட்டு மதியுரைநர் அல்லது ஒரு வரி மதியுரைநர், ஒரு கணக்காளர் என்ற தகைமையில் அல்லது வேறுவகையில் ஏதேனும் முடிவாக்கல் அதிகாரத்தைக் கொண்டிருக்கக்கூடிய அல்லது நம்பிக்கைப்பொறுப்பு தொடர்பாக ஒரு முடிபாக்குநரின் சார்பில் செயலாற்றுகின்ற வேறெவரேனும் இயற்கை ஆள்.

(2) நம்பிக்கைப் பொறுப்பாளர், பயனுகரிகள் அல்லது பயனுகரிகளின் வகுப்புக்கள் தொடர்பிலான தகவல் உட்பட, (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட தகவல், போதியளவான தாகவும் சரியானதாகவும் மற்றும் நாளது வரையாக்கப்பட்டதாகவும் இருப்பதை, கிடைக்கக்கூடியதான அளவுக்கு, நம்பகமான மற்றும் சுயாதீனமான மூல ஆவணங்கள், தரவு அல்லது தகவலின் மூலம் சரிபார்க்க நியாயமானமுறையில் வழிமுறைகளை எடுத்தல் வேண்டுமென்பதுடன், வெளிப்படையான நம்பிக்கைப்பொறுப்புடன் இணைந்த பணம்தூய்தாக்கல், பயங்கரவாதிக்கு நிதியளித்தல் அல்லது பயங்கரவாதி பெருக்கத்திற்கு நிதியளித்தல் என்பவற்றின் ஆபத்து மட்டங்களை கவனத்திற்கொண்டு, தோதான இடைவெளிகளில் அத்தகைய தகவலை பரிசீலனை செய்து நாளது வரையாக்கப்படுதலும் வேண்டும்.

(3) நம்பிக்கைப் பொறுப்பாளரொருவர், 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின் கருத்தெல்லையினுள் ஏதேனும் நிதிசார் நிறுவனத்துடனோ அல்லது குறித்தொதுக்கப்பட்ட நிதிசாரா தொழிலுடனோ அல்லது உயர் தொழிலுடனோ வெளிப்படையான நம்பிக்கைப் பொறுப் பொன்றின் சார்பில் தொழில் உறவுமுறை யொன்றை தாபிக்கும்போது அல்லது ஏதேனும் கொடுக்கல்வாங்கலை கொண்டுநடாத்தும் போது: -

(அ) தான் நம்பிக்கைப் பொறுப் பொன்றின் நம்பிக்கைப் பொறுப்பாளர் தகைமையில் செயற்படுகின்றேன் என்று அத்தகைய நிறுவனத்துக்கு, தொழிலுக்கு அல்லது உயர் தொழிலுக்கு வெளிப்படுத்துதல் வேண்டும்;

(ஆ) நம்பிக்கைப் பொறுப்பு 5அ என்னும் பிரிவின்கீழ் பதிவு செய்யப்படவேண்டி தேவைப் படுத்தப்பட்டதா என்பதை அத்தகைய நிறுவனத்துக்கு, தொழிலுக்கு அல்லது உயர் தொழிலுக்கு உறுதிப்படுத்தல் வேண்டுமென்பதுடன்,அத்தகைய பதிவு தேவைப்படுத்தப் படுமிடத்து, அத்தகைய பதிவின் ஆதாரத்தை வழங்குதலும் வேண்டும்;

(இ) வேண்டுகோளின்மேல்,ஏதேனும் எழுத்திலான சட்டத் தின்கீழ் வாடிக்கையாளர் கவனக்கரிசனை மற்றும் பயனுறு சொத்துவம் தொடர்பில் அதன் கடப்பாடுகளுடன்

இணங்கியொழுகுவதற்கு அத்தகைய நிறுவனம், தொழில் அல்லது உயர்தொழிலை இயலுமாக்குவதற்கு அவசியமான ஏதேனும் ஆதாரப்படுத்துகின்ற ஆவணங்களுடன் சேர்த்து, இப்பிரிவின்கீழ் பேணப்படும் தகவலை தேவையற்ற காலதாமதமின்றி வழங்குதல் வேண்டும்.

(4) நம்பிக்கைப்பொறுப்பாளரொருவர், வெளிப்படையான நம்பிக்கைப்பொறுப்பு தொடர்பில் நம்பிக்கைப்பொறுப்பாளர் தொழில் உறவுமுறையை பேணும் ஏதேனும் நிதிசார் நிறுவனத்துக்கு அல்லது குறித்தொதுக்கப்பட்ட நிதிசாரா தொழில் அல்லது உயர்தொழிலுக்கு, இப்பிரிவின் குறிப்பீடுசெய்யப்படும் தகவலின் ஏதேனும் மாற்றம் தேவையற்ற காலதாமதமின்றி தெரிவிக்கப்படுவதை உறுதிப்படுத்தல் வேண்டும்.

(5) நம்பிக்கைப் பொறுப்பொன்று ஆட்களின் வகுப்பொன்றின் நன்மைக்காக உருவாக்கப்பட்டிருக்கின்ற விடத்து, அதிகூடிய சாத்தியமான அளவிற்கு அத்தகைய ஆட்களின் வகுப்பைச் சேர்ந்த ஒவ்வோராளினதும் அடையாளம் பற்றிய விதந்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய எல்லாத் தகவலும் (1) ஆம் உட்பிரிவின்கீழான பதிவேட்டில் பேணப் படுதல் வேண்டும்.

(6) ஓராம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஆட்களின் அடையாளம்பற்றிய தகவல்கள் பின்வரும் முறையில் பதிவேட்டில் பேணப் படுதல் வேண்டும்:-

(அ) அத்தகைய ஆள் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் அல்லது கம்பெனிகள் தொடர்பான ஏதேனும் முன்னைநாள் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது பதிவுசெய்யப்பட்ட ஒரு கம்பெனி யாகவிருப்பின், அத்தகைய கம்பெனியின் பயனுறு சொந்தக் காரர்களாகவுள்ள இயற்கை ஆட்களின் அடையாளம்பற்றிய தகவல்கள்;

(ஆ) அத்தகைய ஆள், 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் அல்லது கம்பெனிகள்தொடர்பாகஏதேனும் முன்னைநாள் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகள் தவிர்ந்த ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருப்பின், அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவினது பயனுறு அக்கறையின் சொந்தக் காரர்களாகவுள்ள இயற்கை ஆட்களின் அடையாளம் பற்றிய தகவல்கள்;

(இ) அத்தகைய ஆள் ஒரு குழுமமாக, பங்காண்மையாக, ந ம் பி க் கை ப் பொ று ப் பா க அல்லது கூட்டிணைக்கப்படாத குழுவாக இருப்பின், அத்தகைய குழுமத்தினது, பங்காண்மையினது, நம்பிக்கைப் பொறுப்பினது, அல்லது கூட்டிணைக்கப்படாத குழுவினது பயனுறு அக்கறை யின் அப்போதைக்கான சொந்தக் காரர்களாகவுள்ள இயற்கை

ஆட்களின் அடையாளம்பற்றிய தகவல்கள்; அல்லது

(ஈ) அத்தகைய ஆள் (அ), (ஆ), அல்லது (இ) என்னும் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் வகுதியின்கீழ் அடங்காவிடின், ஓர் உருவகம் அல்லது நம்பிக்கைப்பொறுப்பு தொடர்பாக எவர் சார்பில் கொடுக்கல்வாங்கலொன்று நடாத்தப்பட்டுவருகின்றதோ அவர்பற்றிய தகவல்கள்.

(7) நான்காம் உட்பிரிவின் நோக்கத்துக்காக, -

“பயனுகர் சொந்தக்காரர்” என்பது, ஒரு கம்பெனியிலான நேரடியான அல்லது நேரடியல்லாத சொத்தாண்மை அல்லது பங்குகளின் கட்டுப்பாடு அல்லது வாக்களிக்கும் உரிமைகள் அல்லது வேறு சொத்தாண்மை அக்கறையினூடாக, முழுமையாக அல்லது பகுதியளவில், அக்கம்பெனியின் பத்து சதவீதத்தை அல்லது அதற்கு மேற்பட்டதை இறுதியாகச் சொந்தமாக வைத்திருக்கின்ற அல்லது கட்டுப்படுத்துகின்ற ஓர் இயற்கை ஆள் என்று பொருளாகும் என்பதுடன் வேறு வழிவகைகளினூடாகப் பயனுள்ள கட்டுப்பாட்டைப் பிரயோகிக்கின்ற ஓர் இயற்கை ஆளையும் உள்ளடக்கும்; அத்துடன் பயனுகர் சொத்தாண்மை என்பது, அதற்கிணங்கப் பொருளமைத்துக் கொள்ளப்படுதலும் வேண்டும்;

"பயனுள்ள கட்டுப்பாடு" என்பது, ஒன்றில் ஒரு சொத்தாண்மைச் சங்கிலியினூடாக அல்லது பணிப்பாளரொருவரை நியமிப்பதன்மூலம் அல்லது அகற்றுவதன்மூலம் அல்லது கம்பெனியின் தொழிற்பாட்டை, அதன் தொழிற் செயல்முறைகளை அல்லது பொதுவான பணிப்பைப் பாதிக்கின்ற மூலோபாய முடிபை எடுப்பதற்கான ஆற்றல் போன்ற நேரடியல்லாத கட்டுப்பாட்டின் வேறெவையேனும் வழிவகைகளினூடாகக் கட்டுப்பாடானது நேரடியாக அல்லாமல் பிரயோகிக்கப்படும் ஒரு நிலைமையையும் உள்ளடக்கும்;

"கம்பெனிகள் தொடர்பான முன்னை நாள் எழுத்திலான சட்டம்" என்பது, (145 ஆம் அத்தியாயமான) கம்பெனிகள் கட்டளைச்சட்டம் அல்லது 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டம் அல்லது 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டம் என்பவற்றினால் நீக்கப்பட்ட ஏதேனும் எழுத்திலான சட்டம் என்று பொருளாகும்;

"ஆறாம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழான கூட்டிணைக்கப்பட்ட குழு, அல்லது (6) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின்கீழான குழுமம், பங்காண்மை, நம்பிக்கைப் பொறுப்பு அல்லது கூட்டிணைக்கப்படாத குழு என்பவற்றினது பயனுறு அக்கறையின் சொந்தக்காரர்கள்" என்பது-

(அ) அத்தகைய கூட்டிணைக்கப் பட்ட குழுவின் பணிப்பாளர் அல்லது செயலாளர் உட்பட முதன்மை யான அலுவலர்கள்;

(ஆ) அத்தகைய குழுமத்தின் உறுப் பினர்கள்;

(இ) பங்காண்மையின் பங்காளர் கள்;

(ஈ) நம்பிக்கைப் பொறுப்பின் விடயத்தில், (1) ஆம் உட் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஆட்கள்; அல்லது

(உ) விடயத்துக்கேற்ப, கூட்டி ணைக்கப்படாத குழுவின் அப் போதைக்கான உறுப்பினர்கள்,

என்று பொருளாகும்; அத்துடன் அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழு, குழுமம், பங்காண்மை, நம்பிக்கைப் பொறுப்பு அல்லது கூட்டிணைக்கப் படாத குழு என்பவற்றின்மீது பயனுள்ள கட்டுப்பாட்டைப் பிரயோகிக்கின்ற வேறெவரேனும் இயற்கை ஆளையும் உள்ளடக்கும்.

(8) நம்பிக்கைப்பொறுப்பாளர் ஒருவர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆள், நம்பிக்கைப்பொறுப்புடன் அத்தகைய ஆளின் ஈடுபாடு காணப்படுவதிலிருந்து இல்லாதொழிகின்ற தேதியிலிருந்து ஆகக் குறைந்தது ஆறு ஆண்டுகளைக் கொண்ட காலப்பகுதியொன்றுக்கு (1), (2), (5) மற்றும் (6)ஆம் உட்பிரிவுகளில் குறிப்பீடுசெய்யப்படும் எவரேனும் ஆளின் தகவல் பற்றிய பதிவேடு களை பேணுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 19ஆ என்னும் பிரிவைத் திருத்துதல்

**7.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 19ஆ என்னும் பிரிவானது, (1)(அ) என்னும் உட்பிரிவில் "வெளிப் படையான நம்பிக்கைப் பொறுப்பொன்றின் நம்பிக்கைப் பொறுப்பாளர் ஒருவர் அத்துடன் கூட்டு நம்பிக்கைப் பொறுப்பாளர் எவரேனுமிருப்பின்" மற்றும் "அத்தகைய

நம்பிக்கைப்பொறுப்பாளர்” என்னும் சொற்களுக்குப் பதிலாக, முறையே “வெளிப்படையான நம்பிக்கைப்பொறுப்பொன்றின் நம்பிக்கைப்பொறுப்பாளர் ஒருவர் அல்லது அதிகாரமளிக் கப்பட்ட ஆள்” மற்றும் “அத்தகைய நம்பிக்கைப்பொறுப்பாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆள்” என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக் கத்தின் 19இ என்னும் பிரிவை மாற்றீடு செய்தல்

**8.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 19இ என்னும் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

“5அ, 6அ, 19, 19அ மற்றும் 19ஆ என்னும் பிரிவுகளை மீறுவதற்கான தண்டம்

**19இ.** (1) பிரிவுகள் 5அ, 6அ, 19, 19அ மற்றும் 19ஆ என்னும் பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கு முரணாகச் செயலாற்றுகின்ற ஒரு நம்பிக்கைப்பொறுப்பாளர் அல்லது ஓர் அதிகாரமளிக்கப்பட்ட ஆள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் ஒரு நீதிவானினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படு வதன்மீது மூன்று மில்லியன் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்துக்கு அல்லது பத்தாண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) (அ) ஒரு கம்பெனியாகவுள்ள நம்பிக்கைப் பொறுப்பாளரொருவர் 5அ, 6அ, 19, 19அ மற்றும் 19ஆ என்னும் பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கு முரணாகச் செயலாற்று கின்றவிடத்து, அவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் ஒரு நீதிவானினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படு வதன்மீது மூன்று மில்லியன் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்துக்கு அல்லது பத்தாண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(ஆ) இவ்வுட்பிரிவின்கீழான தவறொன்று புரியப்படுமிடத்து, அப்போது, அத்தவறு புரியப்பட்ட நேரத்தில் அத்தகைய கம்பெனியின் பணிப்பாளரொருவராக அல்லது அலுவலரொருவராக இருந்த ஆள் ஒவ்வொருவரும், அத்தவறானது அத்தகைய ஆள் அறியாமல் புரியப் பட்டதென, அல்லது அத்தகைய தவறு புரியப்படுவதனைத் தடுப்பதற்கு உரிய எல்லா விழிப்புக்கவனத்தையும் அத்தகைய ஆள் பிரயோகித்தாரென அத்தகைய ஆள் எண்பித்தாலொழிய, அத்தவறைப் புரிந்துள்ள வராகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) (அ) கூட்டிணைக்கப்பட்ட குழு வொன்றாக, குழுமமாக, பங்காண்மையாக, நம்பிக்கைப்பொறுப்பாக அல்லது கூட்டிணைக்கப்படாத குழுவாகவுள்ள நம்பிக்கைப் பொறுப்பாளரொருவர் 5அ, 6அ, 19, 19அ மற்றும் 19ஆ என்னும் பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கு முரணாகச் செயலாற்று கின்றவிடத்து, அவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் ஒரு நீதிவானினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படு வதன்மீது மூன்று மில்லியன் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்துக்கு அல்லது பத்தாண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(ஆ) இவ்வுட்பிரிவின்கீழான தவறொன்று ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவினால், குழுமத்தினால், பங்காண்மையினால், நம்பிக்கைப்பொறுப்பினால் அல்லது கூட்டிணைக்கப்படாத குழுவினால் புரியப்படு மிடத்து, அப்போது,-

(i) அது கூட்டிணைக்கப்பட்ட குழு வொன்றாக விருப்பின், அக்கூட்டி ணைக்கப்பட்ட குழுவின் ஒவ்வொரு பணிப்பாளரும், முகாமை யாளரும் அல்லது செயலாளரும்;

(ii) அது ஒரு குழுமமாகவிருப்பின், குழு மத்தின் ஒவ்வோர் உறுப்பினரும்;

(iii) அது ஒரு பங்காண்மையாகவிருப்பின், பங்காண்மையின் ஒவ்வொரு பங்காளரும் ;

(iv) அது ஒரு நம்பிக்கைப் பொறுப்பாக விருப்பின், ஒவ்வொரு நம்பிக்கைப் பொறுப்பாளரும் அல்லது அதிகார மளிக்கப்பட்ட ஆளும்;

(v) அது ஒரு குழுமம், பங்காண்மை அல்லது நம்பிக்கைப்பொறுப்பு தவிர்ந்த கூட்டிணைக்கப்படாத குழு வொன்றாகவிருப்பின், அத்தகைய கூட்டிணைக்கப்படாத குழுவின் ஒவ்வோர் உறுப்பினரும்,

அவற்றைப் புரிந்துள்ளாரெனக் கருதப் படுதல் வேண்டுமென்பதுடன் ஒரு நீதிவானினால் குற்றத் தீர்ப்பளிக்கப் படுவதன்மீது ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்துக்கு அல்லது பத்தாண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொரு வகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்:

ஆயின், அக்கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஒவ்வொரு பணிப்பாளரும், முகாமையாளரும் அல்லது செயலாளரும், குழுமத்தின் ஒவ்வோர் உறுப்பினரும், பங்காண்மையின் ஒவ்வொரு பங்காளரும், நம்பிக்கைப்பொறுப்பின் ஒவ்வோர் ஆக்குநரும், நம்பிக்கைப்பொறுப்பாளரும் மற்றும் பயனுகரியும் அதிகாரமளிக்கப்பட்ட ஆளும் அல்லது அத்தகைய கூட்டிணைக் கப்படாத குழுவின் ஒவ்வோர் உறுப்பினரும், தாம் அறியாமல் அத்தகைய தவறு புரியப்பட்டதென அல்லது அத்தகைய தவறு புரியப்படுவதனைத் தடுப்பதற்கு உரிய எல்லா விழிப்புக்கவனத்தையும் தாம் பிரயோகித்தாரென அவர் எண்பித்தால் அத்தகைய தவறைப் புரிந்துள்ளாரெனக் கருதப்படுதலாகாது.".

முதன்மைச் சட்டவாக் கத்தில் 19ஈ மற்றும் 19உ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்

**9.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 19இ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் இவை அச்சட்டவாக்கத்தின் 19ஈ மற்றும் 19உ என்னும் பிரிவுகளாகப் பயனுடையதாதலும் வேண்டும்: -

"பதிவாளர் தலைமையதிபதி யினால் தண்டமொன்று விதிக்கப்படுதல்.

**19ஈ.** (1) எவரேனும் நம்பிக்கைப் பொறுப்பாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆள் 5அ என்னும் பிரிவின் (7) ஆம் உட்பிரிவு, 6அ என்னும் பிரிவின் (2) மற்றும் (3) ஆம் உட்பிரிவுகள் அல்லது 19அ என்னும் பிரிவு என்பவற்றின் ஏற்பாடுகளுக்கு முரணாகச் செயலாற்றியுள்ளாரென நம்பு வதற்குப் பதிவாளர் தலைமையதிபதி போதிய சான்றைக் கொண்டிருக்குமிடத்து, பதிவாளர் தலைமையதிபதியானவர் தவறு எச்சூழ்நிலைகளில் புரியப்பட்டதோ அச்சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு, ஒரு தண்டத்தை விதிப்பது தோதானதாக விருப்பின், அறிவித்தலொன்று பெறப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாதத்தினுள்

தோன்றி அவர்மீது ஏன் தண்டமொன்று விதிக்கப்படலாகாதெனக் காரணம் காட்டு வதற்கு நம்பிக்கைப்பொறுப்பாளரைத் தேவைப்படுத்துகின்ற அத்தகைய அறிவித்தல் விதித்துரைக்கப்படக்கூடியவாறான ஒரு படிவத்தில் அத்தகைய நம்பிக்கைப் பொறுப் பாளருக்குச் சேர்ப்பிக்கப்படுவதனைச் செய்விக்கலாம்.

(2) அறிவித்தலானது எந்த நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு அல்லது அதிகாரமளிக் கப்பட்ட ஆளுக்குச் சேர்ப்பிக்கப்படுகின்றதோ அந்த நம்பிக்கைப் பொறுப்பாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆள், அத்தகைய அறிவித்தல் பெறப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாதத்தினுள், அத்தகைய நம்பிக்கைப் பொறுப்பாளர் அல்லது அதிகாரமளிக்கப் பட்ட ஆள் 5அ என்னும் பிரிவின் (7) ஆம் உட்பிரிவு, 6அ என்னும் பிரிவின் (2) மற்றும் (3) ஆம் உட்பிரிவுகள் அல்லது 19அ என்னும் பிரிவு என்பவற்றின் ஏற்பாடுகளுக்கு முரணாகச் செயலாற்றினாரென ஒப்புக்கொள்ளுமிடத்து, பதிவாளர் தலைமையதிபதி, ஒரு நீதிவானினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படின் அத்தகைய நம்பிக்கைப்பொறுப்பாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆள் 19இ என்னும் பிரிவின்கீழ் விதிக்கப்படக்கூடிய எந்த அதிகபட்சக் குற்றப்பணத்துக்கு ஆளாகவிருப்பாரோ அந்த அதிகபட்சக் குற்றப்பணத்தின் மூன்றிலொன்றை விஞ்சாத ஒரு பணவகையான தண்டத்தை அத்தகைய நம்பிக்கைப்பொறுப்பாளரின்மீது அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆளின்மீது விதித்தல் வேண்டும்.

(3)(அ) அறிவித்தலானது எந்த நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆளுக்குச் சேர்ப்பிக் கப்படுகின்றதோ அந்த நம்பிக்கைப் பொறுப்பாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட

ஆள் அத்தகைய அறிவித்தல் பெறப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாதத்தினுள் தோன்றி, தண்டத்தின் விதிப்புக்கெதிராகக் காட்டுவதற்கான காரணமொன்றை அத்தகைய நம்பிக்கைப்பொறுப்பாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆள் கொண்டுள்ளாரெனக் கூறுமிடத்து, பதிவாளர் தலைமையதிபதியானவர் அக்கருமத்தை உடனடியாகக் கேட்டு முடிபுசெய்வதற்கு நடவடிக்கையெடுக்கலாம்.

(ஆ) கொடுக்கப்பட்ட காரணங்களுடன் பதிவாளர் தலைமையதிபதி திருப்திப் படாதவிடத்து, பதிவாளர் தலைமை யதிபதியானவர், அதற்கான காரணங்களைக் குறித்தளித்தபின்னர், இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தண்டத்தை விதிக்கலாம்.

(4) 5அ என்னும் பிரிவின் (7) ஆம் உட்பிரிவு, 6அ என்னும் பிரிவின் (2) மற்றும் (3) ஆம் உட்பிரிவுகள் அல்லது 19அ என்னும் பிரிவு என்பவற்றின் ஏற்பாடுகளின் ஏதேனும் மீறுகைக்காக இப்பிரிவின்கீழ் எவரேனும் நம்பிக்கைப்பொறுப்பாளருக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆளுக்குப் பதிவாளர் தலைமையதிபதி ஒரு பணவகையான தண்டத்தை விதிக்குமிடத்து, பதிவாளர் தலைமையதிபதியானவர், விதித்துரைக்கப் படக்கூடியவாறான ஒரு படிவத்தில் அத்தகைய நம்பிக்கைப்பொறுப்பாளருக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆளுக்கு அம்முடிபு சேர்ப்பிக்கப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும்.

(5) பதிவாளர் தலைமையதிபதியின் முடிபினால் இன்னலுறும் எவரேனும் நம்பிக்கைப்பொறுப்பாளர் அல்லது அதிகார மளிக்கப்பட்ட ஆள், (இதனகத்துப்பின்னர் “செயலாளர்” எனக் குறிப்பீடுசெய்யப்படும்)

இக்கட்டளைச் சட்டத்தினது ஏற்பாடு களின் நடைமுறைப்படுத்துகை குறித்தளிக்கப்பட்ட வாறான அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு, (3) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட அத்தகைய முடிபு பெறப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களினுள் மேன்முறையீடு செய்யலாம்.

(6) செயலாளரானவர், பதிவாளர் தலைமையதிபதியின் முடிபையும் தவறு எச்சூழ்நிலைகளில் புரியப்பட்டதோ அச் சூழ்நிலைகளையும் கவனத்துட்கொண்டு, அத்தகைய ஏதேனும் மேன்முறையீட்டின்மீது முடிபொன்றைச் செய்தல் வேண்டு மென்பதுடன் ஒன்றில்-

(அ) பதிவாளர் தலைமையதிபதியின் முடிபை அனுமதிக்கலாம், மாற்றலாம் அல்லது வேறுபடுத்தலாம் என்பதுடன் அதற்கிணங்கச் செயலாற்றும்படி பதிவாளர் தலைமையதிபதியைப் பணிக்கலாம்; அல்லது

(ஆ) அதன்கண் குறிப்பிடப்பட்ட காரணங் களுக்காக மேன்முறையீட்டுக்கு அனுமதிமறுக்கலாம்.

(7) பதிவாளர் தலைமையதிபதி, அத்தகைய பணிப்பிலிருந்து பதினான்கு நாட்களினுள் செயலாளரினால் வழங்கப்பட்ட எதேனும் பணிப்புக்கு இணங்கியொழுகுதல் வேண்டுமென்பதுடன், பதிவாளர் தலைமை யதிபதியின் முடிபினால் இன்னலுற்ற நம்பிக்கைப்பொறுப்பாளருக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆளுக்குச் செயலாளரின் பணிப்பை அறிவித்தலும் வேண்டும்.

(8) இக்கட்டளைச்சட்டத்தில் அடங்கியுள்ளது எது எவ்வாறிருப்பினும், இப்பிரிவின்கீழான ஒவ்வோர் அறிவித்தலும் பதிவஞ்சல் மூலம் அல்லது நம்பிக்கைப்பொறுப்பாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆள் கடைசியாக அறியப்பட்ட வதிவிடத்தில் வெளிக்காட்டிவைக்கப்படுதல் வேண்டும், அத்துடன் அவ்வாறு அனுப்பப்பட்ட அல்லது வெளிக்காட்டிவைக்கப்பட்ட அறிவித்தலொன்று அந்நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆளுக்குச் முறையாகச் சேர்ப்பிக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

(9) இக்கட்டளைச்சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், சார்த்தப்பட்ட தவறாளர் அத்தகைய தவறைப் புரிந்தமையை ஒப்புக்கொண்டு அத்தகைய தண்டத்தைச் செலுத்தியிருக்குமிடத்து, 5அ என்னும் பிரிவின் (7) ஆம் உட்பிரிவு, 6அ என்னும் பிரிவின் (2) மற்றும் (3) ஆம் உட்பிரிவுகள் அல்லது 19அ என்னும் பிரிவின் ஏற்பாடுகளின் அதே மீறுகை தொடர்பாக ஏதேனும் நீதிமன்றத்தில் துடர்ச்சி அல்லது குற்றவழக்கு எதுவும் தொடுக்கப்படுதலாகாது.

(10) (அ) செயலாளரின் முடிபினால் இன்னலுற்ற எவரேனும் நம்பிக்கைப் பொறுப்பாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆள், அத்தகைய முடிபு (8) ஆம் உட்பிரிவின் கீழ் அறிவிக்கப்பட்டிருப்பதாக கருதப்படும் தேதியிலிருந்து முப்பது நாட்களினுள் ஒரு சட்டப் பிரச்சினைமீது மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மேன்முறையீடொன்றைச் செய்யலாம்.

(ஆ) இவ்வுட்பிரிவின்கீழான மேன்முறையீடுகள் தொடர்பில் அரசியலமைப்பின்

136 ஆம் உறுப்புரையின்கீழ் விதிகள் ஆக்கப்படும்வரை, இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஒவ்வொரு மேன்முறையீடு தொடர்பாக, மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கான மீளாய்வு என்ற வகையிலான விண்ணப்பமொன்று தொடர்பில் இவ்வுறுப்புரையின்கீழ் ஆக்கப்பட்ட விதிகள் ஏற்புடையதாதல் வேண்டும்.

தண்டத்தை அறவிடுதல்

**19உ.** (1) பிரிவு 19ஈ இன் (4) அல்லது (7) ஆம் உட்பிரிவுகளின்கீழான முடிபு செய்யப்பட்டதிலிருந்து ஒருமாதம் கழிந்ததன்மேல், அத்தகைய முடிபு எந்த நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆளுக்குச் செய்யப் பட்டதோ அந்த நம்பிக்கைப் பொறுப்பாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆள் தண்டக்கொடுப்பனவில் தவறுகைபுரியு மிடத்து, பதிவாளர் தலைமையதிபதி, அத்தகைய ஆளுக்குச் சேர்ப்பிக்கப்பட்ட அறிவித்தலினதும் முடிபினதும் சான்றுப் படுத்தப்பட்ட பிரதியுடன்சேர்த்து, பதிவாளர் தலைமையதிபதியினால் விதித்துரைக்கப் படக்கூடியவாறான படிவமொன்றில் சான்றிதழொன்றை, மீறுகையானது எந்தப் பிரிவில் இடம்பெற்றதோ அந்தப் பிரிவில் நியாயாதிக்கங்கொண்டுள்ள நீதிவானுக்கு வழங்குதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் பதிவாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்று சான்றில் ஏல்தக்கதாதல் வேண்டுமென்பதுடன் அதன்கண் குறிப் பிடப்பட்ட நிகழ்வுகளின் முதற்றோற்றச் சான்றாதல் வேண்டும்.

(3) நீதிவான் அதன்மேல், 19ஈ என்னும் பிரிவின்கீழ் வருமதியான பணத்தொகையை அறவிடுவதற்கான மேற்கொண்ட வழக்குநடவடிக்கைகள்

அத்தகைய நம்பிக்கைப்பொறுப்பாளருக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆளுக்கு எதிராக ஏன் எடுக்கப்படுதலாகாதெனக் காரணங்காட்டுவதற்கு (1) ஆம் உட்பிரிவின் கீழான தண்டக்கொடுப்பனவில் தவறுகை புரிகின்ற அத்தகைய நம்பிக் கைப்பொறுப் பாளரை அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆளைத் தம் முன்னர் கட்டளைவிட்டழைத்தல் வேண்டுமென்பதுடன், போதிய காரணங் காட்டப்படுவதில் தவறுகை புரியப் படின் அத்தகைய பணத்தொகை மறியற் றண்டனையினால் தண்டிக்கப் படற்பாலதான தவறொன்றுக்காக அத்தகைய ஆளின்மீது நீதிவானின் தண்டனைத்தீர்ப்பொன்றினால் விதிக்கப்பட்ட குற்றப்பணமொன்றாகக் கருதப்படுதலும் வேண்டும்; அத்துடன் அத்தகையவொரு தவறுக்காக விதிக்கப்பட்ட குற்றப்பணமொன்றின் கொடுப்பனவிலான தவறுகை தொடர்பாக 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 291 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் (அதன் (1) ஆம் உட்பிரிவின் (அ), (ஈ) மற்றும் (ஐ) என்னும் பந்திகள் தவிர) அதன்மேல் ஏற்புடையனவாதல் வேண்டுமென்பதுடன் நீதிவானானவர், அத்தகைய தண்டனைத் தீர்ப்பை விதிக்கும் நேரத்தில் அவ்வுட் பிரிவின் ஏற்பாடுகளின்மூலம் அவர் விடுத்திருக்கக்கூடிய ஏதேனும் பணிப்பை விடுக்கலாம்.”.

ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**10.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.